# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.02/2021** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா– 01 ( PW– 01 )** |
| **பெயர்** | :- | **அருள் பிரகாசம்** |
| **தேதி** | :- | **14–11–2025** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**02–ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :–**

நான் வழக்குரையில் என்ன புல எண் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 47/4A, 47/5B ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளேன். நான் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்வதற்குமுன் வழக்குச் சொத்து சம்மந்தமாக வில்லங்க சான்று எடுத்து பார்க்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்குமுன் வில்லங்க சான்று எடுத்து பார்த்தேன். ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்குமுன் 01-ஆம் பிரதிவாதியிட -மிருந்து உரிமை மூல ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். அது பாகப்பிரிவினை பத்திரம். பட்டா, சிட்டா, அடங்கல் எதுவும் எடுத்துப் பார்க்கவில்லை.

02-ஆம், 03-ஆம் பிரதிவாதிகளை இந்த வழக்கில் எதற்காக தரப்பினராக சேர்த்தேன் என்றால் எனக்கு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தபிறகு அவர்களுக்கு 01-ஆம் பிரதிவாதி கிரய பத்திரம் எழுதிக் கொடுத்ததால் சேர்த்தேன். நான் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்கிறேன் என்றால் சரிதான். நான் தொழில் நிமித்தம் வேறு பல விற்பனைக்கான ஒப்பந்தங் -களை ஏற்படுத்திருக்கிறேன் என்றால் சரிதான். பதிவுசெய்யப்பட்ட

ஒப்பந்தங்களையும் பதிவுசெய்யப்படாத ஒப்பந்தங்களையும் ஏற்படுத் -திருக்கிறேன். நான் இந்த வழக்கில் விற்பனைக்கான ஒப்பந்தத்தை பதிவு-செய்யவில்லை. சொத்தின் அனைத்து உரிமையாளர்களிடமும் நான் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை என்றால் 01-ஆம் பிரதிவாதி சொத்து தனக்கு மட்டும்தான் என்று சொன்னார். என்னுடைய ஒப்பந்ததில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண் வருவாய் துறை ஆவணங்களில் உள்ளது போன்று இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் வேறு விவரம் உள்ளதா என்றால் உள்ளது. ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது 01-ஆம் பிரதிவாதி என்னிடம் அந்த விவரத்தை சொல்லவில்லை. புல எண் 47/4 என்பதை பொறுத்து நான் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் 01-ஆம் பிரதிவாதியிடம் முன்பணமாக எவ்வளவு கொடுத்தேன் என்றால் 10 இலட்சம் உரூபாய்.

நான் 01-ஆம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக்கொண்டதாக சொல்லும் ஒப்பந்தம் விற்பனைக்கான ஒப்பந்தம் 02-ஆம் பிரதிவாதியை கட்டுப்படுத் -தாது என்று சொன்னால் சரியல்ல. நானும் 01-ஆம் பிரதிவாதியும் 02-ஆம் பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கில் வழக்கு விற்பனைக்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. என்னை ஏமாற்றதான் பிரதிவாதிகள் மூவரும் ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர்.

விற்பனைக்கான ஒப்பந்தம் உண்மையில்லை என்பதால்தான் முத்திரை தாள் வாங்கிய தேதிக்குமுன் ஒப்பந்தம் எழுதப்பட்டதாக புனையப் -பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன விற்பனைக்கான ஒப்பந்தம் 02-ஆம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் ஒப்பந்தத் -திற்காக 01-ஆம் பிரதிவாதியிடம் எவ்வித முன்பணமும் நான்

கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு ஏதேனும் கொடுத்திருந்தாலும்கூட அது 02-ஆம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. 02-ஆம் பிரதிவாதியை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**03–ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :–**

வழக்கு விற்பனைக்கான ஒப்பந்தத்தை பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் ஒருபகுதியை 03-ஆம் பிரதிவாதி கிரயம் வாங்கி இருக்கிறார் என்பதால்தான் இந்த வழக்கில் அவரை தரப்பினராக சேர்த் -துள்ளேன் என்றால் சரிதான். 03-ஆம் பிரதிவாதி வழக்குச் சொத்தை வாங்குவதற்குமுன் வில்லங்க சான்று எடுத்துப் பார்த்தார் என்றும் வருவாய் துறை ஆவணங்களை பரிசீலித்தார் என்றும் அதில் என்னுடைய ஒப்பந்தம் சம்மந்தமாக எவ்வித குறிப்பும் இல்லாததால் வில்லங்கம் எதுவும் இல்லை என்று நம்பி கிரயம் வாங்கினார் என்றும் சொன்னால் சரியல்ல. 03-ஆம் பிரதிவாதி அவர் வாங்கிய சொத்திற்கு தகுந்த மறுபயனை 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 03-ஆம் பிரதிவாதி நல்லெண்ணத்தில் கிரயம் வாங்கியதால் என்னுடைய ஒப்பந்தமும் இந்த வழக்கும் அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு 03-ஆம் பிரதிவாதியுடன் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.